**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 142/2023**

**2024ம் ஆண்டு ஜுன் மாதம் 25-ஆம் தேதி செவ்வாய்கிழமை**

வா.சா.1 சாட்சியின் வாக்குமூலம் பிரமாணச்சட்டம் 1969, பிரிவு 6(1)ன்படி உதவியாளர் திரு.சி.இளங்கோவன் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் பிரபாகரன் | த/பெ |
| ஊர் | வட்டம் |
| சாதி | சமயம் |
| வயது | தொழில் |

**முதல்விசாரணை:-**

நான் இந்த வழக்கின் வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். நான் வாதி வங்கியின் மேலாளர் ஆவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். என்னுடைய தகவலின் பேரில் தான் தயாரிக்கப்பட்டது. அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு கையெழுத்திட்டேன். அதனை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. கடன் விண்ணப்பம் அசல் வா.சா.ஆ.1
2. பொதுவை ஒப்பந்தம் அசல் வா.சா.ஆ.2
3. பொறுப்புறுதி ஆவணம் அசல் வா.சா.ஆ.3
4. பத்திர வைப்பு ஆவணம் அசல் வா.சா.ஆ.4
5. கணக்கு பட்டியல் உண்மை நகல் வா.சா.ஆ.5

வாதியின் பிராதுப்படி தீர்ப்பளிக்க வேண்டுகிறேன்.

**சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது**

சார்பு நீதிபதி
மானாமதுரை